# சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

சப்ரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் தொழினுட்பவியல் சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

---

சப்ரகமுவ மாகாண சபையின் அரச சேவையின் தொழினுட்பவியல் சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக சப்ரகமுவ மாகாணத்தில் வசிக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி :- 2024.07.12.

03.

3.1 பொதுத் தகைமை :-

(அ). விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

(ஆ). இப்பதவிக்கு விண்ணப்பிக்க எந்த மதகுருவும் தகுதியற்றவர்.

(இ). சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ). 2024.07.12 திகதிக்கு விண்ணப்பதாரர் சப்ரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் , விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்தர வதிவிடமில்லை எனின் , விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

(உ). விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதிற்கு குறையாத 30 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

(ஊ). ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு உரிய தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லை என்பன பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

(எ). விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு விண்ணப்பதாரிகள் இப் பதவிக்குரிய அனைத்து கல்வி மற்றும் தொழிற் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

3.2 கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்

| கல்வித் தகைமைகள் | | தொழிற்தகைமைகள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| பதவிக்குரிய கா.பொ.த (சா.த) தகைமைகள் | பதவிக்குரிய கா.பொ.த (உ.த) தகைமைகள் | | |
| தாய் மொழி (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம் மொழி) கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | கா.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் (உயிரியல் விஞ்ஞானத்துடன் இரசாயனவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய 02 பாடங்களில்) அல்லது உயிரியல் அமைப்பு தொழில்நுட்ப பாடவிதானத்தின் கீழ் (உயிரியல் அமைப்பு தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம்) ஆகிய மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும். (பொது பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் பாடமாக கொள்ளப்படாது) | I. கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கால்நடை பராமரிப்பு பயிற்சிக் கல்லூரியில் இருந்து பெற்றுக் கொண்ட கால்நடை பராமரிப்பு டிப்ளோமா சான்றிதழ் அல்லது<br>II. அநுராதபுரம் / சிற்பிகுலம் கால்நடை நிர்வாக பயிற்சி நிலையத்தினால் வழங்கப்படும் வருட டிப்ளோமா சான்றிதழ் அல்லது<br>III. கரதகொல்ல கால்நடை நிர்வாக கல்லூரியினால் வழங்கப்படும் இரு வருட டிப்ளோமா சான்றிதழ் | 02 |

04. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்**

இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய ,இந்தப் பதவிகளின் III தரத்திற்கான சம்பள வகுதி MN 3 -2016 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.31,040/--10x445-11x660-10x730-10X750-ரூ57,550/- ஆகும்.

05. III ஆம் தரத்திற்குரிய பதவிகள் நிரந்தரமானது.ஓய்வூதியத்துடன் கூடியது.ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

06. ஆட்சேர்ப்பு செய்யும் முறை

i). வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும். சித்தியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு 40% ஆகும்.

**இணைத்துக்கொள்வதற்கான எழுத்துப்பரீட்சையின் பாடத்திட்டம்**

01). நுண்ணறிவு பரீட்சை – காலம் 01 மணித்தியாலம் – 100 புள்ளிகள்

விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் திறன் , பகுப்பாய்வு திறன் ,நேர முகாமைத்துவத்தினை தீர்மானித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்ட பலதேர்வு வினாத்தாள்

02). தொழில்நுட்ப பரீட்சை - காலம் 03 மணித்தியாலம் – 100 புள்ளிகள்

பதவிக்குரிய தொழில்நுட்பவியல் அறிவினை அளவிடும் பின்வரும் விடயங்களைக் கொண்ட வினாத்தாள்

1. இலங்கை கால்நடை வளர்ப்பின் தற்போதைய நிலைமைகள் மற்றும் வளத்திறன் மற்றும் பொருளாதாரத்தில் பங்களிப்பு
2. இலங்கையின் கால்நடை உற்பத்தி முறைகள் , உற்பத்தி அளவுகள் மற்றும் சந்தைப்படுத்தல் முறைகள், இலங்கையில் தற்போதுள்ள கால்நடை வளர்ப்பு முறைகள் அவற்றின் இருப்பிடம் மற்றும் விநியோகம்.
3. பண்ணை விலங்குகள் இனப்பெருக்கம் செய்வதற்கு பொதுவாக பயன்படுத்தும் முறைகள்.
4. விலங்கு தொற்று நோய்கள் , விலங்கு நோய் கட்டுப்பாட்டு முறைகள் , நோய்வாய்ப்பட்ட விலங்குகளிடம் இருந்து மாதிரிகள் சேகரிப்பு மற்றும் போக்குவரத்து.
5. ஒருங்கிணைந்த விவசாய முறைகள் மற்றும் மறு சுழற்சி முறைகள்.
6. கால்நடை வளர்ப்பு மற்றும் அது சார்ந்த தொழில்கள் , பால் பதப்படுத்தல் ,இறைச்சி பதப்படுத்தல் , கால்நடை தீவன உற்பத்தி.
7. விலங்கு உற்பத்தி செயல்முறை , பண்ணை அறிக்கை மற்றும் கணக்குப் பகுப்பாய்வு பண்ணை திட்டமிடல் தொடர்பான வருமானம் மற்றும் செலவு கணக்கீடு முறைகள்.
8. அறிவியல் தகவல் பரப்பும் முறைகளின் பயன்பாடு.

(இப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக நடாத்தப்படும்.கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடாத்துகின்ற நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.)

ii). பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருந்தால், தகுதிகள் மற்றும் சான்றிதழ்கள் ஒரு பொது நேர்காணல் மூலம் சரி பார்க்கப்பட்டு தகுதியானவர்கள் பணிக்கமர்த்தப்படுவார்கள்.

iii). வெற்றிடங்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ளதால், பணிக்கமர்த்தப்பட்டவர்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களில் பணியாற்ற வேண்டும்.

iv). தகுதியின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை விட அதிக மதிப்பெண்களைப் பெற்ற தகுதியான விண்ணப்பதாரிகள் இருந்தால் , கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி சமனான மதிப்பெண்களைப் பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து மேலதிக தெரிவை மேற்கொள்வதற்கு சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு தீர்மானிக்கலாம்.

(a). விண்ணப்பதாரிகளின் திறனை மதிப்பிடுவதற்கான எழுத்துப் பரீட்சை

(b). தகுதி அடிப்படையில் நேர்காணல்.

07. விண்ணப்பிக்கும் முறை :-

7.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.2 பரீட்சைக் கட்டணம் ரூ. 600/- ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை சப்ரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு சப்ரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு ( தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.3 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2024.07.12 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் "செயலாளர் , சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி " என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சப்ரகமுவ மாகாண சபையின் அரச சேவையில் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் III ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2024 " எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

7.4 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும். அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

ஈ. கே.ஏ.சுனீதா,

செயலாளர்,

சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

சப்ரகமுவ மாகாணம்

2024.06.12

ඊ.කේ.ඒ. සුනීතා
ලේකම්
පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව
සබරගමුව පළාත.